# பொல்பிதிகம பிரதேச சபை

# குருநாகல் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைக் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்தவை மற்றும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, பொல்பிதிகம பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொல்பிதிகம பிரதேச சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளை உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள், நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காசு மீதியினைக் காண்பிக்கின்ற போது கொங்ரீட் செயற்திட்டத்திற்குரிய பொழிப்பு காசுப்புத்தகத்தின் (பி.ச.10) பிரகாரம் காணப்பட்ட ரூபா 711,385 மீதியை எடுக்காமல் பேரேட்டின் காசுக்கணக்கிலுள்ள ரூபா 716,535 வை மீதியாகக் எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அதற்குரிய வங்கிக்கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கின்ற போதும் பி.ச.10 இன் படியான காசு மீதி எடுக்கப்படாமல் பேரேட்டுக் கணக்கின் படியான மீதியே எடுக்கப்பட்டிருந்தது.

(இ) சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற 6 நிகழ்ச்சித்திட்டங்களில் 5 இற்கு மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 15,036,390 தொகையான சம்பள மீளளிப்புக்கள் வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் நிகழ்ச்சித்திட்டம் 1 இன் கீழ் மாத்திரம் ($^{1}/_{71}$) காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய கொங்ரீட் செயற்திட்டக் கணக்கின் இலாபமான ரூபா 67,826 தொகையானது வருமானம் மற்றும் செலவினக் கணக்கிலோ அல்லது திரண்டநிதியத்திலோ சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 188,377 பெறுமதியான நிலையான சொத்துக்கள் நிலையான சொத்துக்களின் கீழ் ஐந்தொகையில் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

5 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20,624,168 ஆக இருந்ததுடன் துணைப் பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் மீதிகளின் மொத்தம் ரூபா 16,739,438 ஆக இருந்தது.

### 1.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

2 கணக்கு விடயங்களுக்குரிய விளக்கமளிக்கப்படாத ரூபா 1,687,150 மீதியொன்று காணப்பட்டது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டுக்கும் மேலாக செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 69,691,794 ஆகும்.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

#### (அ) கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை

4 கணக்கு விடயங்களின் கீழ் காணப்பட்ட ரூபா 5,378,782 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்காக பட்டோலைகள் மற்றும் நிலையான சொத்துப்பதிவேடுகள் சமர்ப்பிக்காமை காரணமாக அவ்விடயங்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

#### (ஆ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2011 மே 30 ஆந் திகதி வரையில் கணக்காய்வு ஐயவினாக்கள் 02 இற்கு பதிலளிக்கப்பட்டிருக்காததுடன் அக்கணக்காய்வு ஐயவினாக்களில் உள்ளடக்கப்பட்ட கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 3,343,625 ஆகும்.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கும் மேலான வருமானம் ரூபா 5,303,185 ஆக இருந்ததுடன் இதனையொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்திற்கும் மேலான வருமானம் ரூபா 510,328 ஆக இருந்தது.

### 2.2. நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டுக் பிழைகள்/ குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொதுக்கணக்கினதும் வேலைக் கணக்கினதும் வங்கி இணக்கக் கூற்றில் 18 சந்தர்ப்பங்களின் கீழ் காணப்பட்ட ரூபா 1,445,364 தொகைக்குரிய சீராக்கங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடிவுறுத்தப்பட்டிருக்க வில்லை.

(ஆ) காலங்கடந்த வைப்புக்கள் நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்க்கப்பட வேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதியிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாத 12 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 357,774 வைப்பு மீதியொன்று காணப்பட்டது.

(இ) கடன்கொடுத்தோர் ரூபா 68,058,969 இல் ரூபா 65,338,631 தொகையானது 1 வருட காலத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து கொண்டு வரப்படுகின்ற கடன்கொடுத்தோர் காணப்பட்டதுடன் 1 வருடத்திற்கு மேலான காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற முற்பண வருமானத்தின் கீழ் காண்பிக்கப்படுகின்ற ரூபா 38,400 மீதித் தொகையானது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடிவுறுத்தப்பட்டிருக்க வில்லை.

(ஈ) பெறவேண்டிய கணக்குகளின் கீழ் ஏனைய வருமானங்களாகக் காட்டப்பட்டிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 718,425 தொகையும் நிலையான வைப்பு வட்டி ரூபா 1,133,432 தொகையும் 3 வருடத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற போதிலும் அவைகள் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 02 வங்கிக் கணக்குகளுக்குரிய வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 50,733 பெறுமதியான 16 காசோலைகள் காணப்பட்டன.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்படப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வுரமானம் என்பவை பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டள்ளன.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்ட | 2010 உள்ள படியான | 2010 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | 2009 மதிப்பி டப்பட்ட | 2009 உள்ள படியான | 2009 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 10 | 10 | -- | 10 | 09 | 01 |
| (ii) | வாடகை | 2,991 | 2,945 | 46 | 1,619 | 1,533 | 86 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 700 | 700 | -- | 652 | 732 | - |
| | | 3,701 | 3,655 | 46 | 2,281 | 2,274 | 87 |

### 2.3.2 நீதிமன்றத் தண்டப் பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றங்களினால் 2007 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டுள்ள ரூபா 718,425 ஆன தண்டப்பணத் தொகை சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது. 2008 ஆம் ஆண்டிலிருந்து கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் கணிப்பிடப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடம் இருந்து பெறப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்களை கணிப்பிட்டு கணக்கிற்கு கொண்டவரப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 கடை வாடகை

பொதுச் சந்தையின் 03 ஆம் இலக்க கடையின் 2007 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 15,000 நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன் 2008 மற்றும் 2009 மார்ச் வரையும் இக்கடையினை வாடகைக்கு விட முடியாதிருந்தது.

## 2.4 செலவுக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாக சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபயான செலவுகள் தொடர்புடைய முரண்களுடன் கீழே தரப்படுகின்றன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **செலவின வகை** | **பாதீடு செய்யப் பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** | **பாதீடு செய்யப் பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** |
| **மீண்டுவரும் செலவுகள்** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** |
| ஆளணிக்கான வேதனம் | 21,370 | 16,418 | 4,952 | 18,107 | 15,655 | 2,452 |
| ஏனையவைகள் | 9,069 | 9,738 | (669) | 8,282 | 7,033 | 1,249 |
| உப மொத்தம் | 30,439 | 26,156 | 4,283 | 26,389 | 22,688 | 3,701 |
| மூலதனச் செலவு | 18,550 | 62,520 | (43,970) | 72,050 | 260,265 | (188,215) |
| முழு மொத்தம் | 48,989 | 88,676 | (39,687) | 98,439 | 282,953 | (184,514) |

## 2.5 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கை**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 01 | - |
| இரண்டாம் நிலைதரங்கள் | 27 | 22 |
| ஆரம்ப தரங்கள் | 38 | 37 |
| ஏனைய(நாளாந்த, தற்காலிக) | - | 08 |

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.6.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 70,938,087 ஆக இருந்ததுடன் 01 ஆண்டு காலத்திற்கு மேற்பட்டிருந்த கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,833,189 ஆக இருந்தது.

### 2.6.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 44,696 ஆக இருந்ததுடன் 01 ஆண்டுக்கு மேற்பட்ட காலமாக அறவீடுகள் நிலுவையாக உள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 40,696 ஆக இருந்தது.

## 2.7 இனங்காணப்பட்ட நட்டம்

சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய காலத்தில் செலுத்தப்படாத காரணத்தினால் ரூபா 8,600 தாமதத் தண்டப்பணம் மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து செலுத்த வேண்டி ஏற்பட்டது.

## 2.8 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்று உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையினைச் செலுத்த வேண்டிய ஊழியர்களுக்கு உரிய சபையினால் மேற்கூறப்பட்ட நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரியமுறையில் செலுத்தப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதிவரை அந்த நிதியத்திற்குச் செலுத்தவேண்டிய மீதி ரூபா 1,695,509 ஆக இருந்தது. அவ்வாறே சபைக்குரிய மாதாந்த தவணைப் பணமாக ரூபா 5,698 அந்த நிதியத்தினால் அறவீடு செய்யப்பட்டிருந்தது அந்த அறவீடுகள் எந்த ஊழியர்கள் தொடர்பானவை என்பதனை சபை அறிந்து கொண்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் 117 மயானநிலங்கள் சம்பந்தமான விபரங்கள் காணப்பட்ட போதிலும் இதில் 40 ஏக்கர் மட்டிலான பிரதேசத்திலுள்ள 35 மயான நிலங்கள் பிரச்சினைகளுக்குரியதாகக் காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இந்த மயான நிலங்கள் சம்பந்தமாக 1988 இன் பிரதேச சபை விதி 203 இன் பிரகாரம் வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) சபை நிலத்தில் அமைந்துள்ள தேக்கு மற்றும் முதிரை மரங்கள் 2 இனை வெட்டுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 38,958 தொகைப் பணம் செலுத்தப்பட்டிருந்தது. இம்மரங்களை வெட்டுவதற்கு முன் உரிய அதிகாரத்தரப்பினரின் அனுமதி பெறவோ அல்லது உரிய மரங்களை வெட்டுவதற்கு முன் அவற்றிலிருந்து பெறக்கூடிய மர அளவுகள் சம்பந்தமான மதப்பீடு செய்தலோ மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் வெட்டுக் கூலி அறிக்கைகளின் பிரகாரம், பலகைகளின் நீளம் 605.3 அடியாகவும், பல அளவுகளிலான வளைகளின் நீள அடி 1262.9 ஆகவும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இப் பலகை அளவு இருப்புக்கள் ஏடுகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**2.9 செயலாற்றல்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் 6 வருமானத் தலைப்புக்களின் கீழ் ரூபா 1,334,000 வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் கீழ் எவ்வித வருமானமும் பெறப்பட்டிருக்கவில்லை.

**2.10 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவகத்தினுள் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமானக் கட்டுப்பாடு

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்